இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in   murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 338 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 03 – ஞாயிற்றுக்கிழமை 19 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 338 : Thiruvalluvar Year - 2057 - Aadi 03 - Sunday 19 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து -

## இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்!

### விண்ணில் பாய்ந்தது!



திருப்பதி, ஜூலை 19-

தெலுங்கானா மாநிலம் தலைநகர் ஐதராபாத்தைச் சேர்ந்த ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் விக்ரம்1 என்ற ராக்கெட்டை தயாரித்துள்ளது. இந்த ராக்கெட் ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத்திலிருந்து நேற்று காலை 11.30 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது. விக்ரம்1 ஆனது கிரகா ஸ்பேஸ், காஸ்மோசர்வ், டிகியூப்ட் மற்றும் ஸ்கைரூட்டின் சொந்த ஸ்கோப் ஆகியவற்றிலிருந்து தொழில்நுட்ப விளக்க ஆய்வு கருவிகளை எடுத்துச் செல்கிறது.

அத்துடன், காஸ்மோஸ் டயமண்ட்ஸின் கலைப் படைப்பான 'காஸ்மிக் புளூம்' மற்றும் ஒரு மைக்ரோஆர்ட் பீஸ் கொண்டு செல்கிறது. விக்ரம் 1 என்பது 7 அடுக்கு உயரமான, பல நிலை சுற்றுப் பாதை ஏவுகணை வாகனமாகும். இது அனைத்து கார்பன் கலவை அமைப்புடன் கட்டப்பட்டது மற்றும் 3டி அச்சிடப்பட்ட எந்திரங்கள் மற்றும் உயர் உந்துதல் திட எரிபொருள் ராக்கெட் பூஸ்டர்கள் உந்துவிசை அமைப்புகளால் இயக்கப்படுகிறது.

இதையடுத்து 350 கிலோ எடையுள்ள சிறிய செயற்கைக்கோள்களை குறைந்த புவி சுற்றுப் பாதைக்குக் கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் முதல் சோதனை விமானம் 60 டிகிரி சாய்வில் 450 கிமீ சுற்றுப் பாதையை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த வகை ராக்கெட் மூலம் சில நூறு கிலோ எடையுள்ள செயற்கைக்கோள்களை குறைந்த பூமியின் சுற்றுப் பாதையில் நிலை நிறுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு சிறிய வகை ராக்கெட்டாகும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

### ஏற்கனவே த.வெ.க. ஆட்சியில் சட்டம் – ஒழுங்கு சீர்கெட்டுள்ள நிலையில்

# காவலர்கள் நியமனத்தை ஓராண்டுக்குத் தள்ளிவைப்பதா?

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூலை 19 -

**தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்தது முதலே குற்றச்சம்பவங்கள் பெருகி சட்டம் ஒழுங்கு பெருமளவில் சீர்கெட்டு கிடக்கும் நிலையில், காவலர்கள் நியமனத்தை ஓராண்டு தள்ளி வைத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்தது முதலே குற்றச்சம்பவங்கள் பெருகி வரும் நிலையில், முன்பை விட கூடுதலாக தற்போது காவலர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஆனால் நடப்பாண்டுக்கான காவலர்கள் நியமனத்தை இன்னும் ஓராண்டுக்கு இந்த அரசு தள்ளி வைத்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் அறிவிப்பின்படி அடுத்த ஆண்டு தான் காவலர்கள் தேர்வுக்கான அறிவிப்பு வெளியாகவிருக்கிறது.

இது, காவல்துறை பணிக்காக காத்திருக்கும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

இதன் மூலம், ஏற்கெனவே சீர்கெட்டுக் கிடக்கும் சட்டம் ஒழுங்கையும், காவல்துறை பணியின் மீது ஆர்வம் கொண்ட இளைஞர்களின் எதிர்காலத்தையும் ஒருசேர கேள்விக்குறியாக்கி இருக்கிறது இந்த அரசு.

எனவே, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம் தற்போது வெளியிட்டிருக்கும் அட்டவணையை உடனடியாக திரும்பப் பெற்று, நடப்பு ஆண்டிலேயே காவலர்களை நியமிப்பதற்கான பணிகளை தொடங்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### நாடாளுமன்றத்தில் மீண்டும் FCRA மசோதா

## 7 மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய அரசு முடிவு!

புதுடெல்லி, ஜூலை 19 -

வருகின்ற 20ஆம் தேதி தொடங்க உள்ள நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் FCRA உள்ளிட்ட 7 மசோதாக்களை தாக்கல் செய்ய உள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெற உள்ளது. 23 லட்சம் மாணவர்களின் கனவை நசுக்கிய நீட் வினாத்தாள் கசிவு, 17 லட்சம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு பிரச்னையை ஏற்படுத்திய சி.பி.எஸ்.இ. பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில் நடந்த குளறுபடி, அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு, ஈரான்அமெரிக்கா போரில் 13 இந்தியர்கள் கொல்லப்பட்டது உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

நாடாளுமன்றத்தை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்க 19ம் தேதி அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் , நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் FCRA எனும் நிதி திருத்த மசோதா, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 37 ஆக உயர்த்துவது தொடர்பான மசோதா உள்ளிட்ட 7 மசோதாக்களை தாக்கல் செய்ய உள்ளதாக

ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள மசோதா தொடர்பான பட்டியலில், நாடாளுமன்ற தொகுதி மறு சீரமைப்பு மசோதா இடம்பெறவில்லை.

### ரூ.100 கோடி மதிப்புள்ள பழனி கோயிலுக்குச் சொந்தமான

# நிலம் மோசடி - சி.பி.சி.ஐ.டி. விசாரணை தொடக்கம்!

சென்னை, ஜூலை 19 -

**100 கோடி ரூபாய் மதிப்பிலான பழனி கோயில் நிலம் முறைகேடாக பதிவு செய்யப்பட்ட விவகாரத்தில் சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.**

**திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரத்தில் கோவிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை எவருக்கும் விற்பனை செய்யவோ அல்லது வில்லங்கப் படுத்தவோ உரிமை கிடையாது. இத்தகைய கடுமையான சட்டப்பாதுகாப்பு மற்றும் கோயில் நிர்வாகத்தின் தொடர் எழுத்துப்பூர்வ ஆட்சேபனைகளையும் மீறி, கடந்த ஜூலை 6ஆம் தேதி, தனிநபர்கள் இருவரது பெயரில் 1.40 ஏக்கர் நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**த.வெ.க. ஆட்சியில் கோவில் நிலம் மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டு தனி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது அம்பலமாகி பக்தர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், நிலத்தை கிரையம் செய்து கொடுத்த முருகதாஸ், கிரையம் பெற்ற வெள்ளைத்துரை மற்றும் சேதுபதி ஆகிய 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த முறைகேடு தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். திண்டுக்கல் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் பழனி அறநிலையத் துறை அதிகாரிகள் 5க்கும் மேற்பட்டோரிடம் சி.பி.சி.ஐ.டி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சஜிதா தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.**

பழனி அடிவாரம் பூங்கா சாலையில் தண்டபாணி சுவாமிகள் மடம் செயல்பட்டு வந்தது. இந்த மடத்தின் மூலமாக பழனிக்கு வரும் பக்தர்களுக்கு தங்குவதற்கான வசதிகள் செய்து கொடுக்கவும், அன்னதானம் வழங்கவும், இந்து மதத்தை வளர்த்தெடுக்கவும், இந்த இடத்தை பயன்படுத்த வேண்டும் என்பதற்காக தண்டபாணி சுவாமிகள் அறக்கட்டளை நிறுவப்பட்டது. இந்த மடம் பல ஆண்டுகளாக நிர்வாகிகளால் முறையாக பராமரிக்கப்படாமல் இருந்தது.

தண்டபாணி சுவாமிகள் மறைவுக்கு பின்பு அறக்கட்டளையை நிர்வாகம் செய்தவர்கள் இந்த இடம் எதற்காக கொடுக்கப்பட்டதோ அதனை மாற்றி வணிக ரீதியாக பயன்படுத்த முயற்சி செய்தனர். மேலும் பலரும் இந்த இடத்தை ஆக்கிரமித்து கடைகள் அமைத்தனர். இந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு ரூ.100 கோடி என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தண்டபாணி சுவாமிகள் மடத்தை அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. பழனி கோவில் இணை ஆணையராக இருந்த மாரிமுத்துவை தக்காராக நியமித்து மடத்தின் இடத்தை பராமரித்து வந்தனர்.

தற்போது இந்த இடத்தில் பழனி கோவிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் வாகனங்களை நிறுத்திச் செல்லும் வகையில் கட்டணம் இல்லாத வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டது. இந்த நிலையில் தண்டபாணி சுவாமிகள் மடத்துக்குச் சொந்தமான இடத்தை மடத்துக்கு சம்பந்தம் இல்லாத விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த முருகதாஸ் என்பவர் ரூ.2 கோடிக்கு திருப்பூர் மாவட்டம் உடுமலை வட்டம் பாப்பன்குளத்தைச் சேர்ந்த வெள்ளத்துரை, பழனி டி.கே.என். புதூரைச் சேர்ந்த சேதுபதி ஆகிய இருவருக்கும் கடந்த 6ஆம் தேதி பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளார்.

வழக்கமாக பத்திரப்பதிவு செய்யும் நபரை அன்று விடுப்பில் அனுப்பி விட்டு ஜஸ்டின் மணிகண்டன் மூலம் கடந்த 6ஆம் தேதி இந்த பத்திரப்பதிவு நடந்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 27 ஆம் தேதி இந்த பத்திரப்பதிவு செய்ய முயன்றபோது அப்போதைய பதிவாளார் ஒத்துழைப்பு அளிக்காததால் முயற்சியை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர். இதன் பிறகு தான் கடந்த 3ஆம் தேதி பத்திரப்பதிவு அலுவலகத்தில் மீண்டும் இடத்தை பதிய அனுமதி கேட்டு 6ஆம் தேதி பத்திரப்பதிவு செய்திருக்கிறார்கள்.

இதனைத் தொடர்ந்து முறைகேடாக பத்திரப்பதிவு செய்து கொடுத்த சார் பதிவாளார் ஜஸ்டின் மணிகண்டன், அறக்கட்டளை நிர்வாகி முருகதாஸன், இடத்தை வாங்கிய சேதுபதி, வெள்ளத்துரை ஆகிய 4 பேர் மீது மோசடி, சதி செய்தல் உள்பட 5 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

**மாவட்டப் பதிவாளர் நீக்கம்!**

மாவட்ட பதிவுத்துறை சார்பிலும் இந்த பத்திரப் பதிவு தொடர்பாக விசாரணை நடத்தி பதிவுத்துறை தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பதிவுத்துறை அதிகாரிகள் இந்த விவகாரத்தில் முதல் கட்டமாக அதிரடி நடவடிக்கையை எடுத்து உள்ளனர். இதன்படி முறைகேடாக பத்திரப்பதிவு செய்த பழனி சார் பதிவாளார் ஜஸ்டின் மணிகண்டன் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் பழனி கோவில் பத்திர பதிவு முறைகேடு வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி அரசு உத்தர விட்டது. இதற்கான உத்தரவை டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் பிறப்பித்தார். இதனை தொடர்ந்து சி.பி.சி.ஐ.டி போலீசார் தங்களது விசாரணையை அதிரடியாக தொடங்கினார்.

### நியமனத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 18,775 பேருக்கு நிரந்தரப் பணி வழங்குக!

# கண்ணில் சிவப்பு நிற துணியைக் கட்டி ஆசிரியர்கள் நூதனப் போராட்டம்!

சென்னை, ஜூலை 19-

பணி நியமன ஆணையை வழங்கிட வலியுறுத்தி, சென்னை எழும்பூரில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், கண்ணில் சிவப்பு நிற துணியை கட்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு நியமனத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற 18 ஆயிரத்து 775 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு, மறுதேர்வின்றி பணி நியமனம் வழங்கும் வகையில் புதிய அரசாணை பிறப்பிக்க, தமிழ்நாடு அரசை தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகள் மீது த.வெ.க. தலைமையிலான விஜய் அரசு நடவடிக்கை எடுக்காததால், விரக்தி அடைந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டமைப்பினர், சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகே உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2013ம் ஆண்டில் இருந்து 14 ஆண்டுகளில் பல முறை தகுதித் தேர்வு எழுதியும், தகுதி தேர்வோடு நியமனத் தேர்விலும் தேர்ச்சி 18 ஆயிரத்து 775 ஆசிரியர்கள் பெற்றுள்ளதாக கூறியுள்ள அவர்கள், சீனியாரிட்டி அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, 200க்கும் மேற்பட்டோர் கண்களில் ரிப்பன் கட்டி நூதன போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

